செய்தி வெளியீடு எண்:588 நாள் : 19.11.2014

# செய்தி வெளியீடு

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு.ஆர்.பி.உதயகுமார் அவர்கள் தலைமையில் தலைமைச் செயலகத்தில் இன்று (19.11.2014) ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இந்த ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் விதி 110–ன் கீழ் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், நடப்பு ஆண்டில் 3 இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு மாவட்டவாரியாக வழங்கப்பட்ட மற்றும் வழங்கப்படவுள்ள வீட்டுமனைப் பட்டாக்கள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. மேலும் மாவட்டங்களில் நிலுவையில் உள்ள சார் பதிவாளர் அலுவலகத்திலிருந்து பெறப்படும் பட்டா மாற்றம் குறித்த விண்ணப்பங்கள்(STR)/ வருவாய்த்துறை வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து பெறப்படும் பட்டா மாற்றம் குறித்த விண்ணப்பங்கள் (RTR) தொடர்பான நிலை குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வுக் கூட்டத்தில் வருவாய்த்துறை செயலாளர் திரு.ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்/நில நிர்வாக ஆணையர் திருமதி.கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநர், திருமதி.ஆர். வாசுகி, இ.ஆ.ப., மற்றும் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**